உருவாக்குகின்றன. 1981இல் இப்பொருளாதாரம் இத்தகைய சீராக்கங்களினூல் உண்மையில் தளர்ச்சியையும் அமுக்கத்தையும் உணர்திருந்தவேளையில் பன்னூட்டுப் பணவீக்கம், பாதகமான வர்த்தக மாற்று வீதங்களால் இது மேலும் வலுவடைந்து காணப்பட்டது. இந்த நிலையிலும் கூட 1981இல் இலங்கைப் பொருளாதாரத்தின் முழுமையான பொருளாதார செயலாற்றம் 1980ஆம் ஆண்டினைவிடக் கணிசமான முன்னேற்றத்தைக் காட்டியது எனக்குறிப்பிடமுடியும்.

## மொத்தத் தேசிய உற்பத்தி, வருமானம், செலவு

1981 இல் இலங்கைப் பொருளாதாரத்தின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.8 சதவீதத்தால் அதிகரித்தது. 1970 இன் நிலையான விலைகளில் அளவிடும் பொழுது மொஉஉ 1980 இன் ரூ. 195,750 இலட்சத்திலிருந்து 1981 இல் ரூ. 207,060 இலட்சத்திற்கு அதிகரித்தது. எனினும் நிலையான விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு 1981 இல் 4.2 சதவீதமாகும். இது 1980 இன் 5.6 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. 1981 இன் மொஉஉ உடனும் 1980 இன் மொதேஉ உடனும் ஒப்பிடுகையில் மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட குறைந்த அளவிலான வளர்ச்சி விகிதத்திற்குக்காரணம் வெளிநாட்டிற்குச் செலுத்தப்பட்ட தேறிய காரணி வருமானத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பேயாகும். 1980 இன் வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் (1970 இன் நிலையான விலைகளில்) ரூ.1, 190 இலட்சங்கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலிலிருந்து 1981 இல் மூன்று மடங்குக்கு மேலாக ரூ. 4,380 இலட்சம் தேறிய வெளிப்பாய்ச்சல் தொகையாக அமைந்தது. இது வெளிநாட்டுச் சொத்துக்களிலிருந்தான குறைந்த மட்டத்திலான வட்டியினதும் வெளிநாட்டுக்கடன்பாடுகளிலிருந்து எழும் வெளிநாட்டு வட்டிக்கொடுப்பனவுகள், வெளிநாட்டு முதலீடுகளிலிருந்தான வட்டி, பங்கிலாபக்கொடுப்பனவுகள் ஆகியன இருமடங்கிற்கு மேலாக அதிகரித்தினதும் ஒன்றிணைந்த விளைவாக ஏற்பட்டதாகும். தேறிய வெளிக்கொடுப்பனவுகள் 1981 இல் மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை 1.6 சதவீதத்தால் குறைவடையச் செய்தன.

1981 இல் நடைமுறைக் காரணிச்செலவு விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 26 .1 சதவீத வளர்ச்சி வீதத்தைக் காட்டியது. 1980 இல் ரூ. 622,460 இலட்சமாக இருந்த மொஉஉ இன் பெறுமதி 1981 இல் ரூ. 785,060 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1980 இல் ரூ. 4,320 இலட்சம் கொண்ட எதிர்க்கணியத் தொகையாக அமைந்த வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானத்திற்கெதிராக 1981 இல் ரூ. 16,750 இலட்சம் கொண்ட எதிர்க்கணியத் தொகையாக அமைந்த தேறிய காரணி வருமானத்தைக் கணிப்பில் எடுத்துச் சீராக்கம் செய்கையில் 1981 இல் நடைமுறைக்காரணிச் செலவு விலைகளிலான மொதேஉ 24.3 சதவீதத்தால் அதிகரித்தது. உள்ளடக்க மொத்த தேசிய உற்பத்தி விலைச்சுருக்கி 1981 இன் விலைகளில் 19 சதவீதம் கொண்ட பொதுவான அதிகரிப்பைக் காட்டியது,


1981 இல் குடித்தொகை 1.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மதிப்பிடப்பட்ட குடித்தொகை அதிகரிப்பிற்கு இடமளித்து நோக்கின் உண்மையான தலைக்குரிய வருமானம் 2.4 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நடைமுறை விலைகளிலான தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி ரூ. 5,126 அல்லது 265 ஐ. அ. டொலராகும்.

1981 இல் முதன்மையான வளர்ச்சியினைக் கொண்ட துறைகளாக வேளாண்மையும் தயாரிப்பும் விளங்கின. முந்திய சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பொருளாதாரத்தின் அபிவிருத்தி அமைப்பில் இது குறிப்பிடத்தக்க ஒரு முன்னேற்றமாகும். வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்தொழில் என்பன 1981 இல் 6.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. தயாரிப்பும் சுரங்கமும், பயன்படு பணிகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்ததுறையின் முந்திய ஆண்டின் குறைந்த வளர்ச்சி வீதமான 2 1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. வர்த்தகம், போக்குவரத்து, ஏனைய பணிகள் என்பவை முந்திய சில ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1981 இல் குறைந்த வளர்ச்சி வீதமான 6·3 சதவீதத்தைக் கொண்டிருந்தன. 1978,1979 இல் செயற்றிறன் மிக்கதாக விளங்கிய கட்டட ஆக்கத்துறை 1980 இல் மித வளர்ச்சி வீதமான 11 சதவீதத்தினைப் பதிவுசெய்தபின் 1981 இல் சிறிதளவால் வீழ்ச்சி அடைந்தது.

22662
10 JUN 2009
INFORMATION
CENTRE
Communications Department




# மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி

# கைத்தொழில் மூலத்தின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி

*நிலையான (1970) காரணிச் செலவு விலைகளில்*




இலங்கை மத்திய வங்கி.

வேளாண்மைத் துறையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தேயிலை துணைத்துறை அளித்த பங்கு முந்திய ஆண்டின் 7.5 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1981 இல் ஏறக்குறைய 10 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. தெங்குத் துணைத்துறையும் அதன் வெளியீட்டினை 11.5 சதவீதத்தால் உயர்வடையச்செய்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் கூட்டிய பெறுமதிப் பங்கினை அதிகரித்தது. இறப்பர் துணைத்துறை1981ல்தொடர்ந்தும்ஏமாற்றத்தையேஅளித்தது. மொத்தஉள்நாட்டு உற்பத்திக்கு இறப்பர் துணைத்துறை வழங்கிய பங்கு 6 சதவீதத்திலும் கூடுதலாக வீழ்ச்சியடைந்தது.

கடந்த ஆண்டுகளில் மிகுந்த செயலாற்றம் பெற்று விளங்கியநெல்துணைத்துறை இவ் ஆண்டின் போது உற்பத்திப் பிரச்சினைகளை எதிர்நோக்கிய போதிலும் தனது கூட்டிய பெறுமதிப்பங்கினை 1981ல் 3.6 சதவீதத்தால் உயர்த்தியது. உப உணவுப் பயிர்களின் உற்பத்தியும் 1981 இல் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்தது. காட்டுத் தொழில் துணைத்துறையின் பங்கு 1981 இல் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்ததுடன் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் குறைந்த உற்பத்தியளவில் பெருமளவில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. கடற்றொழில், கால்நடை உற்பத்தித் துணைத்துறையில் மீன் உற்பத்தி 11 சதவீதத்தாலும், முட்டை உற்பத்தி ஏறத்தாழ 3சதவீதத்தாலும், பால் உற்பத்தி 9 சதவீதத்தாலும் அதிகரித்தன.

சுரங்க, அகழ்வுத்துறையில்1981இல் வளர்ச்சியில்வேகக்குறைவு காணப்பட்டது. இரத்தினக்கல் அகழ்தல், காரீயம் என்பவற்றைப் பொறுத்தவரை உற்பத்தியில் ஓரளவு வீழ்ச்சி காணப்பட்டது. அதேவேளை இல்மனைற்று, ஏனைய கனிப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தியில் ஓரளவு அதிகரிப்புக் காணப்பட்டது.

தயாரிப்புத்துறை 1981 இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தது. தேயிலை, தெங்கு உற்பத்தி அதிகரித்தமையால் ஏற்றுமதிச் செயல்பாட்டுத்துணைத் துறை 1980 இன் 9.8 சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1981 இல் 7.6 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்தது. தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத்துறையும் 1981 இல் முந்திய ஆண்டினைவிடக் கணிசமான அளவு வளர்ச்சியினைப் பதிவு செய்தது. ஆடைத்தயாரிப்புக் கைத்தொழில்களின் ஏற்றுமதிகளில் 1981 இல் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டது. எனினும் மின்வெட்டுகளும், இவ்வாண்டில் பெற்ரோலிய தூய்மையாக்கி திருத்த வேலைகளுக்காக மூடப்பட்டிருந்தமையும் இத்துணைத்துறையின் உற்பத்தி மட்டங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தோன்றுகின்றது.

கட்டடவாக்கத்துறையில் கட்டடவாக்க நடவடிக்கைகள் சிறிதளவு பின்னடைவைக் கொண்டிருந்தன. கட்டடப் பொருட்களுக்காக குறிப்பாகத் தனியார் துறையிடமிருந்து எழுந்த கேள்வி 1981 இல் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்தது. சீமெந்தின் மொத்தமாகக் கிடைக்கக்கூடிய அளவு 12 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்த போதிலும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சீமெந்தில் கிடைக்கக் கூடிய அளவு இவ்வாண்டில் அதிகரித்தது. எனினும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நிருமாண வேலைகள் போன்ற பல்வேறு ஏனைய நிருமாண நடவடிக்கைகள் 1981இல் தொடர்ந்தும் உயர்மட்டத்திலிருந்தன. மின்வலு, வாயு, நீர், நலப் பணிகள் போன்றவற்றின் கூட்டிய பெறுமதியில் குறிப்பிடத்தக்களவு விரிவாக்கம் காணப்பட்டது. இது பெருமளவிற்கு துணைத்துறைகள் சிலவற்றில் ஏற்பட்ட முதலீட்டு நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்டதாகும்.

தனியார்துறையின் போக்குவரத்து நடவடிக்கைகள் விரிவடைந்ததன் முக்கிய காரணமாகக் கடந்த சில ஆண்டுகளில் துரிதமாக விரிவடைந்த போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல்துறை 1981 இல் சற்று மெதுவான போக்கைக் காட்டியது. மத்திய போக்குவரத்துச்சபை, புகைவண்டித் திணைக்களம் ஆகிய அரசுக்குச் சொந்தமான இரு போக்குவரத்துதுறைகளும் குறைவான போக்குவரத்துப் பணிகளை வழங்கின. மொத்த சில்லறை வர்த்தகத் துறையிலும் மிதமான வளர்ச்சியே காணப்பட்டது. தாராளமாக்கப்பட்ட வர்த்தகத்தின் தொடக்கக் கட்டத்தில் மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்த இறக்குமதி வர்த்தகம் 1981 இல் மிகச் சிறிதளவு அதிகரிப்பையே காட்டியது.

## நிலையான (1970) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின்

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி (ரூ. ப. இ.) | | |
|---|---|---|---|
| | 1979 | 1980* | 1981* |
| **1. வேளாண்மை, காட்டுத்தொழில் கடற்றொழில்** ... | **4,622** | **4,766** | **5,097** |
| 1.1 வேளாண்மை ... | 4,239 | 4,348 | 4,636 |
| 1.1.1 தேயிலை ... | (412) | (381) | (419) |
| 1.1.2 இறப்பர் ... | (223) | (194) | (181) |
| 1.1.3 தெங்கு ... | (519) | (462) | (515) |
| 1.1.4 நெல் ... | (1,132) | (1,267) | (1,313) |
| 1.1.5 ஏனையவை ... | (1,953) | (2,044) | (2,208) |
| 1.2. காட்டுத்தொழில் ... | 166 | 181 | 188 |
| 1.3. கடற்றொழில் ... | 217 | 237 | 273 |
| **2. சுரங்கத்தொழிலும் அகழ்வுத் தொழிலும்** ... | **652** | **684** | **713** |
| **3. தயாரிப்புத் தொழில்** ... | **2,659** | **2,681** | **2,820** |
| 3.1. ஏற்றுமதி பதனிடல் .. | 877 | 791 | 851 |
| 3.2. தொழிலக கைத்தொழில் .. | 1,417 | 1,488 | 1,548 |
| 3.3. சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 365 | 402 | 421 |
| **4. கட்டடவாக்கம்** ... | **960** | **1,066** | **1,034** |
| **5. மின்வலு, வளி, நீர், இன்னோரன்ன** ... | **190** | **209** | **234** |
| **6. போக்குவரத்து, தொடர்பூட்டல்** ... | **1,716** | **1,838** | **1,957** |
| **7. மொத்த சில்லறை வர்த்தகம்** ... | **3,551** | **3,849** | **4,034** |
| 7.1 இறக்குமதிகள் ... | 864 | 985 | 1,005 |
| 7.2 ஏற்றுமதிகள் ... | 709 | 709 | 723 |
| 7.3 உள்நாட்டு ... | 1,978 | 2,155 | 2,306 |
| **8. வங்கித்தொழில், காப்புறுதி உண்மைச்சொத்து**... | **350** | **402** | **462** |
| **9. குடியிருப்புகளின் உடைமை** ... | **518** | **54)** | **579** |
| **10. பொது நிருவாகமும் பாதுகாப்பும்** ... | **905** | **959** | **997** |
| **11. வேறு எங்கும் குறிப்பிடப்படாத பணிகள்** ... (வே.எ.கு) | **2,378** | **2,572** | **2,779** |
| **12. மொத்த உள்நாட்டு உற்பத்தி** ... | **18,501** | **19,575** | **20,706** |
| **13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய்** ... | **—71** | **—119** | **—438** |
| **14. மொத்தத் தேசிய உற்பத்தி** ... | **18,430** | **19,456** | **20,268** |

* தற்காலிகம்

UNIVERSITY OF MORATUWA LIBRARY × SRI LANKA ×

## துறைவகைப்படியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1979 — 1981

| மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ரூ. ப. இ.) | | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பில் சதவீதப் பங்கு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1979 | 1980 | 1981 | 1979 | 1980 | 1981 | 1979 | 1980 | 1981 |
| 25.1 | 24.5 | 25.1 | 90 | 144 | 331 | 8.2 | 14.0 | 40.8 |
| 23.0 | 22.4 | 22.9 | 63 | 109 | 288 | 5.7 | 10.6 | 35.5 |
| (2.2) | (2.0) | (2.1) | (14) | (—31) | (38) | (1.3) | (—3.0) | (4.7) |
| (1.2) | (1.0) | (0.9) | (—2) | (—29) | (—13) | (—0.2) | (—2.8) | (—1.6) |
| (2.8) | (2.4) | (2.5) | (31) | (—57) | (53) | (2.8) | (—5.6) | (6.5) |
| (6.2) | (6.5) | (6.5) | (16) | (135) | (46) | (1.4) | ( 13.1) | (5.7) |
| (10.6) | (10.5) | (10.9) | (4) | (91) | (164) | (0.4) | (8.9) | (20.2) |
| 0.9 | 0.9 | 0.9 | 11 | 15 | 7 | 1.0 | 1.5 | 0.9 |
| 1.2 | 1.2 | 1.3 | 16 | 20 | 36 | 1.5 | 1.9 | 4.4 |
| 3.5 | 3.5 | 3.5 | 33 | 32 | 29 | 3.0 | 3.1 | 3.6 |
| 14.4 | 13.8 | 13.9 | 118 | 22 | 139 | 10.7 | 2.1 | 17.1 |
| 4.7 | 4.1 | 4.2 | 37 | —86 | 60 | 3.3 | —8.4 | 7.4 |
| 7.7 | 7.6 | 7.6 | 55 | 71 | 60 | 5.0 | 6.9 | 7.4 |
| 2.0 | 2.1 | 2.1 | 26 | 37 | 19 | 2.4 | 3.6 | 2.3 |
| 5.2 | 5.5 | 5.1 | 166 | 106 | —32 | 15.1 | 10.3 | —3.9 |
| 1.0 | 1.1 | 1.2 | 32 | 19 | 25 | 2.9 | 1.9 | 3.0 |
| 9.4 | 9.4 | 9.7 | 109 | 122 | 119 | 9.9 | 11.9 | 14.7 |
| 19.3 | 19.8 | 19.9 | 284 | 298 | 185 | 25.8 | 29.1 | 22.8 |
| 4.7 | 5.1 | 5.0 | 162 | 121 | 20 | 14.7 | 11.8 | 2.5 |
| 3.9 | 3.6 | 3.6 | 8 | — | 14 | 0.7 | — | 1.7 |
| 10.7 | 11.1 | 11.3 | 114 | 177 | 151 | 10.4 | 17.3 | 18.6 |
| 1.9 | 2.1 | 2.3 | 32 | 52 | 60 | 2.9 | 5.1 | 7.4 |
| 2.8 | 2.8 | 2.9 | 19 | 31 | 30 | 1.7 | 3.0 | 3.7 |
| 4.9 | 4.9 | 4.9 | 51 | 54 | 38 | 4.6 | 5.3 | 4.6 |
| 12.9 | 13.2 | 13.7 | 166 | 194 | 207 | 15.1 | 18.9 | 25.5 |
| 100.4 | 100.6 | 102.2 | 1,100 | 1,074 | 1,131 | 99.9 | 104.7 | 139.3 |
| —0.4 | —0.6 | —2.2 | 1 | —48 | —319 | 0.1 | —4.7 | —39.3 |
| 100.0 | 100.0 | 100.0 | 1,101 | 1,026 | 812 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

37710

வங்கித் தொழில், காப்புறுதி, மெய்ச்சொத்துக்கள் துறையில் கணிசமான அளவு விரிவாக்கமும் புதிய, பழைய நிறுவனங்களிடையே நடவடிக்கைளின் மீள ஒதுக்கும் காணப்பட்டது. முந்தய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வதிவிடங்களின் உடைமைஎண்ணிக்கையில்ஏற்பட்டவிரிவாக்கமும் 1981இல்குறைவடைந்தது.பொது நிருவாகம், பாதுகாப்பு என்பவற்றிலும் இதே போக்கு அவதானிக்கப்பட்டது. விடுதிகளும் உணவகங்களும், பொழுது போக்கிகள், தொலைக்காட்சி போன்ற புதிய வகைகளிலான ஒலிபரப்புக்கள் என்பன தொடர்பான நடவடிக்கைகள் விரிவடைந்தமையால் பணிகள் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதம் தொடர்ந்து காணப்பட்டது.

1981 இல் பொருளாதாரத்தின் துறைவாரியான செயலாற்றத்தினை ஆராய்கையில் 1981 இன் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்கினை வழங்கிய முக்கிய காரணியாக வேளாண்மைத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் காணப்பட்டது. 1980 இன் 10.6 சத வீதத்துடனும் 1979 இன் 5.7 சத வீதத்துடனும் ஒப்பிடுகையில் இது 1981 இன் வளர்ச்சியில் 35.5 சத வீதத்தை வழங்கியது. தாராள வர்த்தகக் கொள்கையைத் தொடர்ந்தும் கொண்டிருப்பதற்கான இத்துறையின் முக்கியத்துவம் பற்றி அதிகம் வலியுறுத்த வேண்டியதில்லை. பெருந்தோட்ட உற்பத்தியின் செயல்முறைகள் இலங்கையின் கைத்தொழிற்துறைக்கு முக்கிய கூறாக விளங்குவதால் தயாரிப்புத் துறையின் செயலாற்றத்திற்கு இயக்கமுள்ள வேளாண்மைத் துறையும் கணிசமான அளவு பங்கினை வழங்குகின்றது. 1980 இன் 2 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1981 இல் ஏறக்குறைய 17 சத வீதமான மொத்த வளர்ச்சி தயாரிப்புத் துறையிலிருந்து கிடைத்தது.

இலங்கைப் பொருளாதாரத்தின் மீதான பன்னாட்டு வர்த்தக மாற்று வீதத்தின் தாக்கம், 1981 இலும் தொடர்ந்து பாதகமாகவே விளங்கியது. மறு வார்த்தையில் கூறுவதானால் பாதகமான வர்த்தக மாற்றுவீதம் காரணமாகஇலங்கை 1980இல் அதன் மொத்தத் தேசிய உற்பத்தியில் (மொதேஉ) 6 சதவீதத்தை இழந்தமைக்கு எதிராக 1981 இல் 7 சத வீதத்தை இழந்தது. வர்த்தக மாற்று வீதக்குறிகாட்டி (1978 = 100) 1980 இன் 58 இலிருந்து 1981 இல் 46 இற்கு வீழ்ச்சியடைந்தது. மொ.தே உற்பத்தியை வர்த்தக மாற்று வீதத்தின் தாக்கத்திற்கு ஏற்ப சீராக்கம் செய்த பின் மதிப்பிடப்பட்ட மெய்த் தேசிய வருமானம் 1979 இன் 2.6 சதவீத அதிகரிப்பிற்கும் 1980 இன் 3.7 சத வீதத்திலான அதிகரிப்பிற்கும் எதிராக 1981 இல் 3.4 சத வீதத்தால் அதிகரித்தது. மெய்த் தேசிய வருமான மதிப்பீடுகள் புள்ளி விபரப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1.4

**இறக்குமதியான முதலீட்டுப் பொருட்களில் தெரிவு செய்யப்பட்ட சில விடயங்கள்**

(கொ. கா. பெ. பெறுமதி '000 ரூபாய்களில்)

| விடயம் | 1978 | 1979 | 1980 | 1981 |
|---|---|---|---|---|
| 1. பேருந்துகளும் பயணத்தர் வண்டிகளும் ... | 29,231 | 412,054 | 421,207 | 338,430 |
| 2. சரக்கு வண்டிகளும் வான்களும் .. | 237,068 | 317,824 | 765,460 | 771,071 |
| 3. பொறிகள் பொருத்தப்பட்ட அடிச்சட்டம் .. | 407,482 | 282,538 | 235,296 | 59,317 |
| 4. இழு பொறிகள் ... | 350,992 | 366,214 | 370,246 | 116,148 |
| 5. நிலம் சமப்படுத்தும் பொறிகள் .. | 37,772 | 196,168 | 512,351 | 350,451 |
| 6. புகைவண்டித் தொடர்களும் பாகங்களும் .. | 100,343 | 471,686 | 300,043 | 123,124 |
| 7. வானூர்திகளும் வான்கலங்களும் ... | 47,721 | 33,221 | 3,725 | 760 |
| 8. கடற்கலப் பொறிகள் படகின் வெளிப்புற பொறிகள் .. | 63,486 | 78,208 | 107,334 | 73,952 |
| 9. கப்பல்கள், எண்ணெய்க் கப்பல்கள், இழுவைக் கப்பல்கள் | 8,094 | 5,218 | 6,721 | 421 |
| 10. மின் உருவாக்கிகள் ... | 45,979 | 15,030 | 117,457 | 264,984 |
| 11. கடைசல், அரைக்கும் பொறிகள், துளையிடற் பொறிகள் போன்றவை ... | 20,949 | 39,079 | 91,659 | 38,591 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

1981 இல் மொத்த உள்நாட்டுச் செலவு (மொஉசெ) ரூ. 998,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டது. இது 1980 இனைவிட 22.4 சதவீதம் கூடுதலானதாகும். மொத்த உள்நாட்டு செலவில் ரூ. 749,000 இலட்சம் நுகர்விற்குப் பயன்படுத்தப்பட ரூ. 249,000 இலட்சம் மூலதன ஆக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. 1981 இல் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 10.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்ய மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் 18.0 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. பின் கூறப்பட்டதில் ஏற்பட்டுள்ள உயர்ந்த வளர்ச்சி வீதமானது 1980 இல் பேணப்பட்ட கையிருப்புக்களிலிருந்து வளங்கள் பாவிக்கப்பட்டமையால் ஏற்பட்டதாகும்.

அரசதுறை மூலதன ஆக்கம் 1981 இல் 7.6 சதவீத வீழ்ச்சியைக் காட்டிய போதிலும் அத்துறையின் நிலையான மூலதன ஆக்கம் 14.0 சத வீதத்திஞல் அதிகரித்தது. அரச கூட்டுத்தாபனங்களினதும் தனியார் துறையினதும் மூலதன ஆக்கம் 1981 இல் 16.9 சத வீதத்திஞல் அதிகரிக்க இணைந்த இருதுறைகளினதும் நிலையான மூலதன ஆக்கம் 19.0 சத வீதத்திஞல் அதிகரித்தது.

1981 இல் மூலதனப் பொருட்களின் இறக்குமதியில் ஓரளவு குறைப்புக் காணப்பட்டது. எனினும்முக்கிய மூலதனப் பொருட்களின் இறக்குமதி 27 சத வீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. முக்கிய மூலதனப் பொருட்களின் இறக்குமதிகளின் விபரம் அட்டவணை 1.4 இல் தரப்பட்டுள்ளது.

வரி நோக்கங்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கழிவு வசதி 1981 இல் மீளப்பெறப்பட்டமையால், மூலதனப் பொருட்களின் இறக்குமதியில் பெருமளவு வீழ்ச்சி 1981 இல் அவதானிக்கப்பட்டமை எதிர்பார்த்த ஒன்றாகும். மின்வலு உருவாக்கிகளின் இறக்குமதி 126 சத வீதத்தால் அதிகரித்தமையும், சரக்கு வண்டிகள் வான்களின் இறக்குமதிகள் சிறிதளவால் அதிகரித்தமை ஆகிய இரண்டு வகைகளையும் தவிர்ந்த ஏனைய அனைத்து முக்கிய விடயங்களின் இறக்குமதிகள் கணிசமான அளவு வீழ்ச்சியினைக் காட்டி நின்றன. பேருந்துகளினதும் சொகுசு வண்டிகளினதும் இறக்குமதிகள் ஏறக்குறைய 20 சத வீதத்தால் வீழ்ச்சியுற்ற வேளையில் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட அடிச்சட்டங்களின் இறக்குமதி 75 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்தன. உழவு இயந்திரங்கள், நிலச் சமன்பொறிகளினது இறக்குமதிகள் முறையே 69 சத வீதத்தாலும் 32 சத வீதத்தாலும் வீழ்ச்சியுற்றிருந்தன.

முன்னைய சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட கட்டிடவாக்கத்துறையின் துரித விரிவாக்கம் 1981 இல் கட்டுப்படுத்தப்பட்டதாகத் தென்பட்டது. எவ்வாறாயினும் பெறுமதி நியதிகளில் கட்டிடவாக்கத்துறையின் தொழிற்பாடுகள் 26 சத வீதத்தால் விரிவுற்றிருந்தன. மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பல்வேறுவிதமான கட்டிடவாக்கத் தொழிற்பாடுகள் 1980 இன் ஏறக்குறைய ரூ. 33,000 இலட்சம் கொண்ட அதே மட்டத்திலேயே தொடர்ந்திருந்தன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கட்டிடவாக்கத் தொழிற்பாடுகளும் ஏறக்குறைய ரூ. 10,000 இலட்சம் கொண்ட முன்னைய ஆண்டின் மட்டத்திலேயே தொடர்ந்திருந்தன.

மீளநடுகைகள், காணி அபிவிருத்தி தொழிற்பாடுகளின் மூலதன ஆக்கத்தில் பெருமளவு விரிவாக்கம் காணப்பட்டது. இறப்பர் தெங்கு துணைத்துறைகளின் மீள் நடுகைத் தொழிற்பாடுகளில் குறிப்பிடத்தக்கதொரு விரிவாக்கம் காணப்பட்டது

அட்டவணை 1.5

**மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம்**

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | 1978 | 1979 | 1980* | 1981* |
|---|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 8,521 | 13,246 | 20,845 | 24,528 |
| 2. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (சொ. கா. க. பெறுமதி) .. | 3,217 | 5,091 | 7,531 | 7,431 |
| 3. இறக்குமதி உள்ளடக்கம் | 37.8 | 38.4 | 36.1 | 30.3 |

* தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

அண்மைய ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தில் இறக்குமதியின் உள்ளடக்கம் 1978 - 80 காலப்பகுதியில் சராசரியாக 37 சதவீதமாக உயர்ந்ததொரு மட்டத்திலேயே இருந்து வந்தது. ஆயினும் 1981 இல் மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தில் இறக்குமதியின் உள்ளடக்கம் 30 சத வீதத்தால் கணிசமாக வீழ்ச்சியுற்றது.

**மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்**

1981 இல் இலங்கையின் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த மொத்த மூலவளங்களின் சந்தைப் பெறுமதி ரூ. 1,255,000 இலட்சமாக விளங்கியது இது 1980 இல் கிடைக்கப் பெறத் தக்கதாயிருந்ததைவிட ஏறக்குறைய 22 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். மூலவளங்களின் மொத்தக் கிடைப்பனவில் இறக்குமதிகளின் சதவீத முக்கியத்துவம் 1980 இல் 35 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1981 இல் 32 சத வீதமாகக் காணப்பட்டது. மொத்த இறக்குமதிகளின் பெறுமதி முன்னைய ஆண்டின் 52 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1981 இல் ஏறக்குறைய 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மறுசொற்களில் கூறின் உள்நாட்டு உற்பத்தியிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலவளங்கள் 1980 இன் 65 சதவீதத்திலிருந்து 1981 இல் 68 சதவீதமாக அதிகரித்தன.

நுகர்வு, மூலவளப் பயன்பாட்டில் பெரும் பகுதியினை ஈர்த்துக் கொண்டது. சந்தை விலைகளில் நுகர்வுச் செலவினம் முன்னைய ஆண்டின் 31 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 1981 இல் 27 சத வீதத்தால் அதிகரித்திருந்தது. மூலதன ஆக்கச் செலவினம் 1980 இன் 57 சதவீத அதிகரிப்புக்குமாறாக 1981 இல் 18 சதவீதமாக அதிகரித்தது. ஆயினும் முன்னைய பிரிவில் நோக்கப்பட்டதற்கமைய 1981 இல் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் துரிதமாக அதிகரித்திருந்தது.

மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும் பற்றிய விபரங்கள் அட்டவணை 1.6 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 1. 6

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்

| வகுப்பு | நடைமுறை சந்தை விலைகளில் (ப. இ. ரூபாய்களில்) | | | | 1978 விலைகளில் | | | | | | | | சதவீத அதிகரிப்பு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1979 | 1980 (அ) | 1981 (அ) | 1978 தொகை ரூ.ப.இ. | 1978 % | 1979 தொகை ரூ.ப.இ. | 1979 % | 1980 தொகை ரூ.ப.இ. | 1980 % | 1981 தொகை ரூ.ப.இ. | 1981 % | 1978 மேலாக 1979 | 1980 மேலாக 1979 | 1981 மேலாக 1980 |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 59,537 | 76,356 | 102,983 | 125,487 | 59,537 | 100 | 66,105 | 100 | 71,600 | 100 | 75,361 | 100 | 11.0 | 8.3 | 5.3 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 42,665 | 52,387 | 66,527 | 85,405 | 42,665 | 72 | 45,353 | 69 | 47,983 | 67 | 50,766 | 67 | 6.3 | 5.8 | 5.8 |
| 1.2 பொருட்கள், காரணியல்லாப் பணிகளின் இறக்குமதிகள் ... | 16,872 | 23,969 | 36,456 | 40,082 | 16,872 | 28 | 20,752 | 31 | 23,617 | 33 | 24,595 | 33 | 23.0 | 13.8 | 4.1 |
| 2. பயன்பாடு ... | 59,537 | 76,356 | 102,983 | 125,487 | 59,537 | 100 | | | 71,600 | 100 | 75,361 | 100 | 11.0 | 8.3 | 5.3 |
| 2. 1. நுகர்வு ... | 36,148 | 45,169 | 59,084 | 74,927 | 36,148 | 61 | 66,105 | 100 | 43,616 | 61 | 46,887 | 62 | 11.8 | 7.9 | 7.5 |
| 2. 2. மொத்த உள்நாட்டு நிலையான | | | | | | | 40,430 | 61 | | | | | | | |
| மூலதன ஆக்கம் ... | 8,521 | 13,246 | 20,845 | 24,528 | 8,521 | 14 | 10,568 | 16 | 12,719 | 18 | 13,236 | 18 | 24.0 | 20.4 | 4.1 |
| 2.2.1 அரசு ... | (3,077) | (3,809) | (4,709) | (5,375) | (3,077) | (5) | (3.630) | (5) | (3,804) | (5) | (3,842) | (5) | 18.0 | 4.8 | 1.0 |
| 2.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | (2,056) | (9,437) | (16,136) | (19,153) | (2,056) | (3) | (6,938) | (11) | (8,915) | (13) | (9,394) | (13) | 27.4 | 28.5 | 5.4 |
| 2.2.3 தனியார் துறை ... | (3,388) | | | | (3,388) | (6) | | | | | | | | | |
| 2. 3. இருப்புக்கள் ... | 33 | 281 | 1,620 | 331 | 33 | — | 124 | — | 587 | 1 | 120 | — | — | — | — |
| 2. 4. பொருட்கள், காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதிகள் ... | 14,835 | 17,660 | 21,434 | 25,701 | 14,835 | 25 | 14,983 | 23 | 14,678 | 21 | 15,118 | 20 | 1.0 | -2.0 | 3.0 |

(அ) தற்காலிகம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உண்மையான நியதியில் நாட்டிற்குக்கிடைக்கப்பெற்ற மொத்த மூலவளங்கள் 1981 இல் 5.3 சத வீதத்தால் அதிகரித்தன. 1979 இலும் 1980 இலும் மூலவளங்களின் கிடைப்பனவு முறையே 11 சத வீதத்தாலும் 8.3 சத வீதத்தாலும் துரிதமாக அதிகரித்திருந்தன. 1981 இல் குறைந்தளவு மூலவளங்கள் கிடைக்கப் பெற்றமைக்கு உள்நாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற மூலவளங்கள் 1980 இன் மட்டத்திலேயே தொடர்ந்திருந்தமையும், இறக்குமதிகளின் வளர்ச்சி வீதம் குறைந்தமையும் காரணங்களாகும். இறக்குமதிகளின் அளவு 1979 இன் 23 சத வீதத்திற்கும் 1980 இன் 13.8 சத வீதத்திற்கும் எதிராக 1981 இல் 4.1 சத வீதத்தால் அதிகரித்தது. நுகர்வு 1980இல் 7.9சதவீதத்துடன் ஒப்பிடுகையில்1981இல் 7.5 சத வீதத்தால் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டின் 20.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1981 இல் முதலீடு 4.1 சத வீதத்தால் அதிகரித்தது.

மொத்த மூலவளங்களில், நுகர்வுக்காக 62 சதவீதம் பயன்படுத்தப்பட்ட வேளையில் மூலதன ஆக்கத்திற்காக 18 சதவீதம் பயன்படுத்தப்பட்டது. மூலதன ஆக்கத்தில் ஏறக்குறைய 29 சதவீதம் அரச துறையில் ஏற்பட்ட வேளையில் பொதுத்துறை மற்றும் தனியார்துறைக் கூட்டுத்தாபனங்கள் எஞ்சிய 71 சத வீதத்திற்கும் வகைகூறி நின்றன. உண்மை நியதிகளில் ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டின் 2 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 3 சத வீதத்தால் அதிகரித்திருந்தன.

உள்நாட்டு சேமிப்புகள் 1980 ஆம் ஆண்டின் ரூ. 74,000 இலட்சத்துடன் ஒப்பிடுகையில்1981இல் ரூ. 105,000இலட்சமாக அமைந்துமுன்னைய ஆண்டினைவிட ரூ.30,000இலட்சமளவிலான வளர்ச்சியைக்காட்டி நின்றன. ஆயினும் முக்கியமானதொரு கூறாக மாறிவரும் தனியார் மாற்றங்களைக் கருத்திற் கொண்டு சீராக்கஞ் செய்யப்படுமிடத்து மொத்த சேமிப்புக்கள் 1981 இல் ரூ. 46,000 இலட்சங்களால் அதிகரித்திருந்தன. தனியார் மாற்றல்களில் ஏற்பட்ட இத்தகைய கணிசமான அதிகரிப்பின் விளைவாக மொத்த சேமிப்பு விகிதம் 1980 இன் 14.6 இலிருந்து 1981 இல் 16.8 ஆக அதிகரித்தது.

அட்டவணை 1. 7

உள்நாட்டுச் சேமிப்புகள் (அ)

ப. இ. ரூபாய்களில்

| விடயம் | 1979 | 1980* | 1981* |
|---|---|---|---|
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 52,387 | 66,527 | 85,405 |
| 2. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் தேறிய இறக்குமதிகள் ... | 6,309 | 15,023 | 14,81 |
| 3. முதலீடு ... | 13,527 | 22.465 | 24,859 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புகள் (3-2) ... | 7,218 | 7,443 | 10,478 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புகள் விகிதம் (1இன் சதவீதமாக 4) .. | 13.8 | 11.2 | 12.3 |
| 6. தேறிய தனியார் மாற்றல்கள் ... | 754 | 2,260 | 3,849 |
| 7. சேமிப்புக்கள் (4+6) ... | 7,972 | 9,703 | 14,327 |
| 8. சேமிப்புக்கள் விகிதம் ... | 15.2 | 14.6 | 16.8 |

* தற்காலிகம் மூலம்: இலங்கை மத்திய வங்கி

அ) திருத்தப்பட்டது.